This Question Paper consists of 37 questions [Section–A (19) + Section–B (9+9)] and 5 printed pages.

5 பக்கங்களை கொண்ட இவ்வினாத்தாளில் 37 வினாக்கள் உள்ளன. [பகுதி அ-(19), பகுதி ஆ-(9 +9)]

Roll No.
ரோல் ந.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

**Code No.**
கோட் ந. **54/SS/A/TM**

**Set/**செட் **A**

# TAMIL

# (தமிழ்)

## (304)

Day and Date of Examination . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
(தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி)

Signature of Invigilators 1. . . . . . . . . . . . . . . . . .
(தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம்)

2. . . . . . . . . . . . . . . . . .

*பொதுக்குறிப்புகள் :*

1. தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை (Roll No.) வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.
2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.
3. வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.
4. உங்களது வினாத்தாளின் கோட் 54/SS/A/TM மற்றும் செட் A என்று வினாத்தாளில் எழுதுங்கள்.

TAMIL

( தமிழ் )

**(304)**

காலம்: 3 மணி ] [ மதிப்பெண்கள் : 100

குறிப்பு : (i) இந்த வினாத்தாள் பகுதி 'அ' மற்றும் பகுதி 'ஆ' என்னும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

(ii) பகுதி 'அ' வில் உள்ள எல்லா வினாக்களுக்கும் தவறாமல் விடையளிக்க வேண்டும்.

(iii) பகுதி 'ஆ' வில் இரண்டு விருப்பப் பாடங்கள் உள்ளன. தேர்வாளர் இவற்றில் தங்களுக்குரிய ஒரு விருப்பப்பாடத்தின் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

(iv) வினாக்களுக்குரிய மதிப்பெண் அவ்வவ் வினாவிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ளது.

பகுதி—அ

குறிப்பு : எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ஒரிரு சொற்களில் விடை தருக: 1×17=17

**1.** இராமலிங்க அடிகளாரை மக்கள் எவ்வாறு அழைத்தனர்? 1

**2.** 'சூரிய நிழல்' கவிதையில் ஆசிரியர் எதனை பரம்பரைச் சொத்து என்கிறார்? 1

**3.** நயந்து-இச் சொல்லின் பொருள் யாது? 1

**4.** மக்கள் யாரைப்போல் பிறர் காட்டும் வழியில் சென்று மாட்டிக் கொள்வர் என்கிறார் பாரதியார்? 1

**5.** முக்கூடலுக்குத் தற்போது வழங்கும் பெயர்? 1

**6.** உறவு என்பது எப்படி உருவாகும்? 1

**7.** நமக்குக் கிடைத்துள்ள தொன்மையான நூல் எது? 1

**8.** நெற்பயிர்களைக் கடித்து சேதம் விளைவித்தது எது? 1

**9.** உலகின் இரண்டாவது நீண்ட கடற்கரை எது? 1

**10.** கலைமகளின் காப்பிடமாகவும் வளர்ப்பிடமாகவும் எது உள்ளது? 1

**11.** ஜெயங்கொண்டார் எழுதிய நூலின் பெயர் என்ன? 1

**12.** சுக்கு மிளகு என்பது .................. புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும். 1

**13.** அவை இவை என்பவை ...................... பாலாகும். 1

**14.** வினைத்தொகைக்கு ஒரு சான்று தருக. 1

**15.** சொற்பொழிவு - இச் சொல்லில் இடம் பெற்றுள்ளப் புணர்ச்சி ................ ஆகும். 1

**16.** 'அவனோ கொண்டான்' இதில் வந்துள்ள ஓகார இடைச் சொல் .................... 1

**17.** MULTIMEDIA - இச் சொல்லுக்கான தமிழ்ச் சொல் யாது? 1

**18.** (அ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும் : 4×3=12

*(i)* உடன் போக்கின் தேவையை ஓரம்போகியார் எவ்வாறு எடுத்துரைக்கிறார்?

*(ii)* இசுலாமியத் தமிழ்ப் புலவர்கள் தந்த இலக்கியவகை முன்றனைக் கூறுக.

*(iii)* முருகனின் பெருமைகளாகத் தமிழ்விடு தூது கூறுவன யாவை?

*(iv)* திருப்பாவை - குறிப்பு வரைக.

(ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும் : 4×3=12

*(i)* தமிழ் மொழியின் தனித் தன்மை பற்றி எழுதுக.

*(ii)* மனித நேயம் அன்பால் வளர்கின்றதா?

*(iii)* பதினெண் மேல்கணக்கு நூல்களின் பெயர்களை எழுதுக.

*(iv)* கல்லணை கட்டுமானத்தின் சிறப்பு என்ன?

(இ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும் : 4×2=8

*(i)* தன் விவரக் குறிப்பில் இடம் பெற வேண்டியவை யாவை?

*(ii)* வேற்றுமை உறுபுகளைக் குறிப்பிடுக.

*(iii)* இராமலிங்கரின் மனித நேயச் சிந்தனைகளை எழுதுக.

**19.** ஒரு பக்க அளவில் விடையளிக்க :

(அ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க : 6×2=12

*(i)* புறாக்களின் வாழ்க்கை ஒழுக்கமுடையது என்பதைப் பாரதிதாசன் எவ்வாறு விளக்குகிறார்?

*(ii)* செய்யாதன செய்யோம் என்ற பாடலின் பொருளை எழுதுக.

*(iii)* கல்வியின் சிறப்புகளைத் தொகுத்து எழுதுக.

*(iv)* ஆற்றில் வெள்ளம் வருவதற்கான அறிகுறிகளாக முக்கூடற்பள்ளு கூறுவன யாவை?

(ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க: 6×3=18

*(i)* கதவு சிறுகதை மூலம் அறியும் வாழ்வியல் உண்மைகளைக் கூறுக.

*(ii)* தமிழ் இலக்கியங்களில் காணப்படும் உயர்வான சிந்தனைகள் குறித்து எழுதுக.

*(iii)* பூனைக்குப் பால் கொடுக்காததற்குத் தெனாலிராமன் அரசரிடம் கூறிய காரணங்கள் யாவை?

*(iv)* இந்த மருத்துவத்தின் சிறப்புகள் யாவை?

*(v)* பழந்தமிழர் உழவு முறையை விளக்குக.

*(vi)* தஞ்சை பெரிய கோவிலின் சிறப்புகள் குறித்து எழுதுக.

(இ) ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்கவும் : 6

*(i)* வ.உ. சிதம்பரனாரின் விடுதலைப் போராட்டம் குறித்தும் அவரது இலக்கியப் பணிகள் குறித்தும் எழுதுக.

*(ii)* நூல் நிலையங்கள் எவ்வாறு அமைதல் வேண்டும்.

## பகுதி —ஆ

## விருப்பப் பாடம்—I

( இணையமும் தமிழும் )

**20.** அச்சு ஊடகத்திற்கு ஆங்கிலத்தில் .................... என்று பெயர். 1

(அ) கம்ப்யூட்டர்

(ஆ) பிரஸ்

(இ) பிரஸ் மீடியா

(ஈ) பிரிண்டிங்

**21.** எந்த ஆண்டில் தமிழ் இணையம் அறிமுகமானது? 1

**22.** பிணையம் என்றால் என்ன? 1

**23.** MAIL CLIENT - என்பதன் தமிழ்ச் சொல் என்ன? 1

**24.** முகவர்கள் எத்தகையத் திறன்கள் பெற்றிருக்க வேண்டும்? 1

குறிப்பு: ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க : 4

**25.** சில முன்னணி டொமைன்கள் குறித்து எழுதுக.

**26.** அழைப்பு என்பது குறித்து விளக்கம் தருக.

*குறிப்பு:* ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க : 6

**27.** இணையத்தின் பயன்கள் யாவை?

**28.** மின்னஞ்சல் அனுப்பும் முறை யாது?

## விருப்பப் பாடம்—**II**

( மேலாண்மை இயலும் தமிழும் )

**20.** அசைவு என்றால் என்ன? 1

**21.** அமைப்புச் செய்தல் என்றால் என்ன? 1

**22.** கடிதம் என்ற சொல்லின் பொருள் யாது? 1

**23.** நிகழ்வுக் குறிப்பெடுக்க எவ்வாறு தயாராக வேண்டும்? 1

**24.** தொகுக்கும் திறன் விளக்கம் தருக. 1

*குறிப்பு :* ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க : 4

**25.** பல்வேறு வகை மேலாண்மை வகைகளைப் பட்டியலிடுக.

**26.** கவனித்தல் தொடர்பை விவரி.

*குறிப்பு:* ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க : 6

**27.** நிறுவன மேலாண்மையின் முக்கியத்துவத்தை விவரி.

**28.** நிகழ்வுக் குறிப்பின் பயன்பாடுகளை எழுதுக.

★ ★ ★